2021

# தீபம் அறக்கட்டளையின் சமுதாயப்பணிகள்

# Social Activities of Deepam Trust










**DEEPAM TRUST**
(REG NO. 2035/07)
NO.30, THROWPATHI AMMAN KOVIL STREET, VELACHERY, CHENNAI 600 042
www.deepamtrust.org

# தீபம் அறக்கட்டளை

எண்.30,திரௌபதி அம்மன் கோவில் தெரு,
வேளச்சேரி, சென்னை – 600 042
94440 73635 / 044 2244 2515 | www.deepamtrust.org | admin@deepamtrust.org

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையானது அரசு பதிவு பெற்ற, 80G வரி விலக்களிக்கப்பட்ட சமுதாயத் தொண்டு நிறுவனம். இது தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகர் வேளச்சேரியில் 1997ஆம் ஆண்டு முதல் பசியால் வாடும் துயர் அறிந்து சிறு சேவையாகத் தொடங்கி, 2007ஆம் ஆண்டு ஓர் அரசுப் பதிவு பெற்ற ஆன்மநேய அறத்தொண்டு நிறுவனமாகத் தீபம் திகழ்ந்து வருகிறது. இவ்வறக்கட்டளைக் கடந்த 13 ஆண்டுகாலமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் தினசரி நித்யதீபத் தருமச்சாலை வாயிலாகவும், நடமாடும் தருமச்சாலை வாயிலாகவும், தமிழகம் முழுவதும் பல்வேறு தருமச்சாலைகளின் மூலமாக தினசரி காலை பல்லாயிரக்கணக்கானோருக்கு மூலிகை அருட்கஞ்சி வார்த்தல் சேவையும், தினசரி பல நூற்றுக்கணக்கான வறியவர்களுக்குப் பசியாற்றுவித்தல் சேவையும், கல்வி உதவி, மருத்துவ உதவி மற்றும் பல்வேறு சமுக நலப் பணிகளைச் செய்து வருகிறது.

## தொலைநோக்குப் பார்வை:

**பட்டினியில்லா... நோயில்லா... குற்றமில்லா... வளமான வையகத்தை வார்த்தெடுப்போம் !**

## பணி:

- ✓ பசித்த ஏழைகளுக்கு நித்ய அன்னதர்மம் செய்தல்.
- ✓ ஏழை மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இலவசக்கல்வி உதவி வழங்குதல்.
- ✓ இலவச மருத்துவ உதவிகள் செய்தல்.
- ✓ இளைஞர்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்.
- ✓ இளைஞர்களிடையே ஆன்ம நேயத்தை உணரச்செய்தல்.
- ✓ ஆதரவற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி செய்தல்.

## நோக்கம்:

- ✓ தினமும் ஆயிரக்கணக்கான நபர்களுக்குப் பசியாற்ற வேண்டும்.
- ✓ வருடம்தோறும் குறைந்தது 100 ஏழை மாணவ மாணவியர்கட்காவது கல்வி உதவி செய்யவேண்டும்.
- ✓ மாதந்தோறும் இரண்டு நபர்களுக்காவது மருத்துவ உதவி செய்யவேண்டும்.
- ✓ மாதந்தோறும் ஏழ்மை நிலையில் உள்ள 5 குடும்பங்களுக்காவது வாழ்வாதார உதவிகள் (அரிசி மற்றும் மளிகை பொருட்கள்) செய்யவேண்டும்.
- ✓ மாதந்தோறும் 100 நபர்களுக்காவது ஆடைகள் வழங்கவேண்டும்.

## செயல்பாடுகள்:

1. கடந்த 13 வருடங்களாக **நித்ய பசியாற்றுவித்தல்** செய்து வருகிறது.
2. கடந்த 10 வருடங்களாக **கல்வி உதவி** செய்து வருகிறது.
3. கடந்த 10 வருடங்களாக **மருத்துவ உதவி** வழங்கி வருகிறது.(டயாலிசிஸ்)
4. பார்வைக்குறைபாடு மற்றும் ஏழ்மையான மாற்றுத்திறனாளிக் குடும்பங்களுக்குக் கடந்த 9 வருடங்களாக **அரிசி மற்றும் மளிகை** பொருட்கள் வழங்கி வருகிறது.
5. குழந்தைகள் & முதியோர் இல்லங்களுக்கு **ஆடைகள்** வழங்கி வருகிறது.
6. கோடை காலங்களில் தாகம் தணிக்க, பந்தல் அமைத்து, **நீர் மோர்** வழங்கி வருகிறது.
7. குளிர் காலங்களில் சாலையோரம் ஆதரவற்று உறங்குபவர்களுக்கு, **போர்வைகள்** வழங்கி வருகிறது.
8. கடந்த 75 மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து மாத பூசம் நாட்களில் **வடலூர் சத்ய தருமச்சாலையில்** நாகை சன்மார்க்க சங்கத்துடன் இணைந்து பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கு **அன்னதான சேவை** செய்து வருகிறது.
9. இரயிலில் பொருட்கள் விற்கும் பார்வைக்குறைபாடு உள்ளவர்களுக்கு **வாழ்வாதார உதவி** செய்து வருகிறது.
10. தீபாவளி நாட்களில் குழந்தைகள் & முதியோர் இல்லங்களுக்கு **இனிப்பு, காரவகைகள் மற்றும் பட்டாசு** வழங்கி வருகிறது.
11. வாராந்திர வழிபாடு மற்றும் மாதாந்திர சொற்பொழிவுகள் நடத்தி வருகிறது.
12. ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகளை, சுற்றுலா அழைத்துச் செல்கிறது.
13. இயற்கை சீற்றங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களும், பசியாற்றுவித்தலும் செய்து வருகிறது.

**தருமம் செய்வோம்!**



**நித்ய தீப தருமச்சாலை , வேளச்சேரி**

**தயவுடன் வாழ்வோம்!**

# 1.அன்னதானம்:

பசியாற்றுவிக்க நினைப்பவன் –**மனிதன்**

பசியாற்றுவிப்பவன் –**மாமனிதன்**

பசியாறியவர்களைக் கண்டு மகிழ்பவன் –**மகான்**

பசியாறியவர்களால் பராட்டப்படுபவன் –**கடவுள்**





தமிழகம் முழுவதும் பல்வேறு தருமச்சாலைகளின் மூலமாக தினசரி காலை பல்லாயிரக்கணக்கானோருக்கு மூலிகை அருட்கஞ்சி வார்த்தல் சேவையும், தினசரி பல நூற்றுக்கணக்கான வறியவர்களுக்குப் பசியாற்றுவித்தல் சேவையும் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பெருங்கருணையாலும், தயா உள்ளம் கொண்ட தயவாளர்களின் பெருந்தயவாலும், ஓயாது உழைக்கின்ற ஆடுகின்ற சேவடிகளின் கடுமையான உழைப்பாலும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன.

## 1.1. காலையில் காஞ்சி வார்த்தல்:







வேளச்சேரி நித்யத் தீபத் தருமச்சாலையைத் தலைமை இடமாகக் கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு கிராம தருமச்சாலைகளின் மூலம் தினசரி நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், ஆதரவற்ற அன்பு உள்ளங்களுக்கும் மனிதநேய உள்ளன்போடு, நூற்றுக்கணக்கான ஆன்மநேய அன்பர்களின் தயவினோடு எந்த வித பாகுபாடும் இல்லாமல், மூலிகைக் கஞ்சி (புதினா, மிளகு, திப்பிலி, இஞ்சி, சீரகம் கலந்த கஞ்சி) வழங்கப்படுகிறது.

## 1.2. நடமாடும் அன்ன தருமச்சாலை:

**"ஜீவகாருண்யமே மோட்சவீட்டின் திறவுகோல்"** என்ற திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் வாக்கிற்கிணங்க வீதிதோறும், வீடுதோறும் சென்று, அதை உருவாக்கத் துணைபுரியும் சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளை கைக்கொண்டுள்ள பல சாதனைகளில், உத்திகளில், செயல்பாடுகளில் நடமாடும் தருமச்சாலையும் ஒன்று.





வசதியற்ற ஏழைக்குடும்பங்கள் வேளச்சேரி, கல்குட்டை போன்ற இடங்களில் பிளாஸ்டிக் அல்லது தகரத்தால் ஒரு கூரை, கிழிந்த புடவையை கதவாக நினைத்துத் தொங்கவிட்டிருக்கும் வீடுகள். பறவைக்கூடு போல கதவில்லை, கழிப்பறையில்லை. அடுத்த வேளைக்கு உணவுமில்லை. சிறுகுழந்தைகளை வைத்துள்ள குடும்பத்தலைவிகள் நமது நித்யத் தீபத் தருமச்சாலைக்கு வந்து போகமுடியுமா? வீதிகளில் நாம் பார்க்கும் பார்வையற்றோர், கைகால் ஊனமுற்றோர், முதியோர், பசியால் வாடுபவர்கள், இவர்கள் நித்யத் தீபத் தருமச்சாலைக்கு வந்து போகமுடியுமா?

உலக அளவிலான ஒரு தொண்டு நிறுவனம் சிறுவர்களின் நலத்திலும், கல்வியிலும் அக்கறை செலுத்திவருகிறது. அது சிலமாதங்கட்கு முன்பு ஒரு தகவல்வெளியிட்டது. ஒரு குடிசைபகுதியில் 10 வயதுள்ள இரண்டு பையன்களைப் பேட்டி காணும்போது, உங்கள்ஆசை என்ன என்று கேட்டபோது, நாங்கள் சாகாமல் இருக்க ஆசைபடுகிறோம் என்றார்கள்! உங்களுக்கு ஏன் இந்தப் பயம் வந்தது? எனக்கேட்டபோது இந்தச் சந்தில் நாங்கள் பத்து நண்பர்கள் இருந்தோம். காலை முதல் இரவு வரை ஒன்றாகவே எங்கும் திரிவோம். ஆனால் இந்த ஓராண்டில் எட்டு பேர் இறந்துவிட்டனர். ஏதேதோ நோய் காரணம் என்றார்கள்! ஆரோக்கியமான உணவு இல்லாததே இதற்குக் காரணம் என அத்தொண்டு நிறுவனம் பல கோணங்களில் செயல்படத் தொடங்கிற்று.

நம்மைப்பொறுத்தவரை ஆரோக்கியமான உணவு தேவைதான். அவ்வாறு கிடைத்தால் சந்தோஷம்தான்! ஆனால் பசிக்குச் சாதாரண உணவு கிடைப்பதே அரிதாகிக்கொண்டிருக்கிறது. இதைக்கண்ட வள்ளலார், "ஒருவர் கஷ்டப்படுவதைக் கண்ட போதாயினும், கேட்டபோதாயினும், அறிந்த போதாயினும் ஓடிச்சென்று அதை நிவர்த்திக்க வேண்டும்" என்பதாகச் சொல்கிறார். இதை ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் காணலாம். அந்த உரைநடையில் அவர் சொன்னதை நடை முறையில் கொண்டுவர "நடமாடும் தருமச்சாலை" ஒன்றை உருவாக்கி தீபம் அறக்கட்டளை கடந்த 13 ஆண்டுகளாக, பசித்தவர்களுக்கு அன்னம் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

### 1.3. ஆதரவற்ற இல்லங்களுக்கு உணவு வழங்குதல்:



மாதந்தோறும் ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி இல்லங்களுக்கு நேரில் சென்று அவர்களுடன் சேர்ந்து ஆடிப்பாடி மகிழ்வித்து சிறப்பு உணவு அளிக்கப்படுகிறது.

### 1.4. சாலை ஓரங்களில் இருப்பவர்களுக்கு உணவு:




'நடமாடும் அன்ன தருமச்சாலை' யின் ஒரு பகுதியாக விடுமுறை நாட்களில் சமைத்த உணவுகளை வாகனத்தில் எடுத்துச் சென்று சாலை ஓரங்களில் இருப்பவர்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது.

## 1.5. அன்ன பிரசாதம் வழங்குதல்:

வேளச்சேரி பகுதியில் உள்ள கோவில்களுக்குத் திருவிழாக் காலங்கள், கூட்டுவழிபாடு மற்றும் சிறப்பு நாட்களில் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குப் பல வகையான அன்பான அன்ன அருட்பிரசாதம் வழங்கப்படுகிறது.





சன்மார்க்க சங்கங்கள் நடத்தும் கூட்டங்கள், சத்சங்கங்கள் மற்றும் சன்மார்க்க விழாக்களுக்குச் சிறப்பு உணவு அளிக்கப்படுகிறது.







**உணவே உயிர்;**

**உயிரே கடவுள்!**



**அன்னதானமே**

**மகா தானம்!**

## 2. கல்வித் தீபம் ஏற்றும் அறக்கட்டளை!

நல்ல மதிப்பெண்கள் பெற்றும் வறுமையினால் தனது உயர்கல்வியைத் தொடரமுடியாதவர்கள், தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள், கிராமப்புற மற்றும் ஏழை எளிய மாணவ–மாணவியர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டயம், பட்டம், பொறியியல் மற்றும் மருத்துவம் பயிலும் ஏழை மாணவ மாணவியருக்குக் கல்வி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2010 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சேவை கடந்த 10 ஆண்டுகளில் 995 மாணவ மாணவியர்களுக்கு ரூ.53 இலட்சம் வரை வழங்கியுள்ளோம். 12–ம் வகுப்பு முடித்தவர்களுக்கு மட்டும்தான் உதவித்தொகை என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், பள்ளிக்கல்வி பயிலும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும் உதவி செய்யப்பட்டு வருகிறது.

**செயல்பாடு**

கல்விக்கான நிதியுதவி தேவைப்படுவோர் தங்களின் விபரங்களைத் தபால் வாயிலாகவும், நேரடியாகவும் கொடுத்து விண்ணப்பிக்க வேண்டும்.

- கல்வி உதவித்தொகை விண்ணபத்தில் தனது படிப்பு, கல்வி நிறுவனம், முகவரி, தனது கல்வித் தேர்ச்சி, தேவைப்படும் நிதியுதவியின் அளவு, ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.தகுதியான விண்ணப்பங்கள் கல்வி உதவிக்குழுவினரால் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- கல்வி உதவிக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ மாணவியர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுகின்றனர். தொலைதூரத்தில் இருந்து வருவோருக்கு உணவு மற்றும் இருவழி போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்படுகிறது.
- நேர்முக தேர்வில் தேர்வான மாணவ மாணவியர்களுக்கு, கல்விக்கட்டணம் காசோலையாக கல்லூரி பெயரில் வழங்கப்படுகிறது.





**2019 – 2020 ஆம் கல்வி ஆண்டில் உதவி பெற்றவர்கள்**

(உயர்ந்த நோக்கோடு செயல்படுத்தப்பட்டுவரும் இந்தக் கல்வி நிதி உதவி அதற்காக மட்டுமே பயன்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியோடு இருப்பதால் மாணவர்களுக்கான கல்வி நிதியுதவியை நேரடியாக அளிக்காமல், பயிற்சிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் என எந்த தேவைக்காக நிதி கோருகிறார்களோ, அதற்கான நிதியை அவர்கள் பயிலும் கல்வி நிறுவனத்தின் பெயரிலேயே காசோலையாக / வரைவோலையாக வழங்கப்படுகிறது).

## 2.1. புத்தகம், குறிப்பேடு மற்றும் பள்ளிச் சீருடைகள் வழங்குதல்:

வறுமையினால் பள்ளி செல்ல முடியாத குழந்தைகள் மற்றும் குழந்தைகள் காப்பகங்களில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு, புத்தகம், குறிப்பேடு மற்றும் அந்த வருடத்திற்குத் தேவையான பள்ளிச் சீருடைகள் வழங்கப்படுகிறது.







## 2.2. இலவச ஆங்கில வகுப்புகள்:

ஆதரவற்றோர் காப்பகங்களில் உள்ள மாணவ மாணவியர்கள் மற்றும் ஆங்கிலம் கற்கும் ஆர்வத்துடன் இருக்கும் ஏழை மாணவ மாணவியர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றது.





**ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் இறை குணமாகும்**

## 2.3. கல்விக் கட்டணம் செலுத்துதல்:

குறைந்த பட்சம் வருடத்திற்கு நூறு ஏழைக்குழந்தைகளின் கல்விக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் தீபம் அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக கடந்த 10 ஆண்டுகளில் தொழிற்கல்வி, கலை&அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் பல மேற்படிப்புகள் பயிலும் 995 மாணவ-மாணவியர்கட்க்கு இதுவரை ரூ.53,87,185/- கல்விக் கட்டணமாக அவர்கள் பயிலும் கல்லூரியின் பெயரில் காசோலை வழங்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.கல்விதானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் ஆண்டு தோறும் நடைபெறும் இவ்வுயரிய தொண்டில் பங்குபெற தீபம் உங்களை அன்புடன் அழைக்கிறது.










| Year | No. of Students Benefited | Educational Help |
|---|---|---|
| 2019-20 | 115 | Rs.5,72,767 |
| 2018-19 | 104 | Rs.6,67,470 |
| 2017-18 | 108 | Rs.5,66,012 |
| 2016-17 | 127 | Rs.6,25,811 |
| 2015-16 | 87 | Rs.3,54,920 |
| 2014-15 | 73 | Rs.4,50,000 |
| 2013-14 | 85 | Rs.5,11,860 |
| 2012-13 | 115 | Rs.6,18,000 |
| 2011-12 | 97 | Rs.5,67,365 |
| 2010-11 | 80 | Rs.3,75,000 |

**Total Students Benefited: 995**
**Total Amount paid: Rs.53, 87,185/-**

## 3. தீபத்தின் மருத்துவ சேவைகள்:

"உடற்பிணி யனைத்தையு முயிர்ப்பிணி யனைத்தையு
மடர்ப்பறத் தவிர்த்த வருட்சிவ மருந்தே"
"மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே"
"என்றே யென்னினு மிளமையோ டிருக்க
நன்றே தருமொரு ஞானமா மருந்தே"
"மலப்பிணி தவிர்த்தருள் வலந்தரு கின்றதோர்
நலத்தகை யதுவென நாட்டிய மருந்தே"

என்னும் வள்ளல் பெருமானின் அகவல் வரிகளுக்கு ஏற்ப நோயினால் வாடுபவர்களுக்கு தீபம் அறக்கட்டளை பல்வேறு மருத்துவ உதவிகளைச் செய்து வருகின்றன.






## மற்ற இதர சமுகப் பணிகள்:

**"உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெல்லாம் விலக நீ அடைந்து விலக்குக மகிழ்க"**

தீபம் அறக்கட்டளைஅன்னதானம் செய்வதையே தனது தலையாய பணியாகக் கொண்டு செயல் பட்டு வந்தாலும், மனிதனின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான கீழ்க் காணும் ஆன்ம நேயப் பணிகளையும் செய்து வருகிறது.

### 4. அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் உதவி:

தீபத்தின் ஆன்மநேய அறப்பணிகளில் ஒன்றான பார்வையற்றவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பல குடும்பங்களுக்கு ஆயுட்கால வாழ்வாதார உதவி கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக செய்யப்பட்டு வருகிறது. அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை அன்று சென்னை வேளச்சேரி தருமச்சாலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கு பெற்று ஆன்மலாபம் அடைய தங்களின் கமலமலர் பாதம் பணிந்து விண்ணப்பிக்கின்றோம். தாங்கள் மாதந்தோறும் ஒரு பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு மாதத்திற்கு உண்டான 25 Kg அரிசி மற்றும் மளிகைப் பொருட்களான துவரம்பருப்பு ஆயில் இதரப் பொருட்களையும் வாரி வழங்கிட வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறோம்.




ஒருவருக்கு அளிக்கப்படும் அரிசி மற்றும் மளிகை பொருட்கள் 2000/- வரை செலவு ஆகும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்."தானமும், தவமும் செய்வாராகில் வானவர் நாடு வழி திறந்திடுமே" என்ற ஔவையாரின் பொன்வரிகளுக்கு ஏற்பவும் எல்லா உயிர்களும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே என்ற தாயுமானவர் வாக்கிற்கிணங்கவும்,

**"மண் திணி ஞாலத்து உயிர் வாழ்வோருக்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

என சிலப்பதிகார நாயகி கண்ணகியின் தர்ம வரிகளுக்கு ஏற்பவும்,

**"எங்கெங்கு இருந்து உயிர் ஏதேது வேண்டினும்**
**அங்கங்கு இருந்து அருள் அருட்பெருஞ் ஜோதி!"**

என்னும் திருஅருட்பிரகாச வள்ளல்பெருமானின் உண்மை அறநெறிக்கு ஏற்ப தங்களை இணைத்துக் கொண்டு தர்மத்தின்படி வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## 5. ஆடைகள் உதவி:

மனிதனின் அடிப்படை தேவைகளில் ஒன்று உடுத்த உடை. அந்த வகையில் மானம் காக்க, ஆடை இல்லாதோர்க்கு உதவும் வகையில், நன்கொடையாளர்களிடம் இருந்து புதிய ஆடைகள் மற்றும் நல்ல நிலையில் மற்றவர்கள் பயன்படுத்தும் வகையில் உள்ள பழைய ஆடைகளைப் பெற்று இல்லாதோர்க்கு வழங்கப்படுகின்றன. இதன் ஒருபகுதியாக வருடம் தோறும் மார்கழி மாதத்தில் கடும் குளிரில், சாலையோரத்தில் ஆதரவற்று உறங்குபவர்களுக்கு நள்ளிரவில் நேரில் சென்று நூற்றுக்கணக்கான போர்வைகள் வழங்கப்படுகின்றன.





## 6. வாழ்வாதார உதவி!

இரயிலில்பொருட்கள் விற்கும் பார்வையற்றோரை நாம் பார்த்திருப்போம். அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், எழுதுபொருட்கள்,நோட்டு,கடலை மிட்டாய், பர்பி போன்ற பல்வேறு பொருட்கள் மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதன் வருமானத்தில் அக்குடும்பம் வாழ்கிறது.





## 7. சொற்பொழிவு (சத்சங்கம்):

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக் கிழமைகளில் வேளச்சேரி நித்யத் தீபத் தருமச்சாலையில் மாலை 6 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகிறது. இந்நிகழ்வில் ஆன்ம தேர்ச்சி பெற்ற, வாழ்வியல் அனுபவங்களில் சிறந்து விளங்கும் சன்மார்க்கிகளைக் கொண்டு சொற்பொழிவு நடைபெறுகிறது.




**சத்விசாரம் இறைவனை அடையும் வழியாகும்!**

## 8. கோடை காலங்களில் நீர் மோர் & ரஸ்னா:

ஒவ்வொரு வருடமும் கோடைகாலங்களில் சுட்டெரிக்கும் கடும் வெய்யிலில் வாடும் அன்பர்களின் தாகம் தணிக்கும் பொருட்டு நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டு தினசரி பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு நீர்மோர் வழங்கப்படுகிறது. கோடை முடியும் வரை தினமும் வேளச்சேரி தண்டீஸ்வரம் சிவன்கோவில் ஆர்ச் அருகில் மதியம் 12 மணி முதல் நீர்மோர் வழங்கப்படுகிறது.






## 9. வடலூர் சத்ய தருமச்சாலையில் சேவை:

**"வருவார ழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே**
**வந்தாற் பெறலாம் நல்ல வரமே."**

ஒவ்வொரு மாதமும் பூச நன்னாளில் வடலூர் சத்ய தருமச்சாலையில் சேவை செய்ய சேவதாரிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். பூசத்திற்கு முந்தய நாள் இரவு 9 மணிக்கு வேளச்சேரி நித்யத் தருமச்சாலையில் இருந்து வாகனம் வடலூர் செல்லும். வடலூரில் சத்ய தருமச்சாலையில் இரண்டு இரவுகள் தொடர் பயணம் செய்து நாள்முழுவதும் நாகை சன்மார்க்க சங்க அன்பர்களுடன் நமது தீபத்தின் ஆடுகின்ற சேவடிகளும் இணைந்து காலை முதல் இரவு வரை காய் வெட்டுதல், உணவு சமைத்தல், உணவு பரிமாறுதல் போன்ற அன்னதான அறப்பணிகளை தீபம் தொடர்ந்து 75 மாதங்களாக (7 வருடத்திற்கும் மேலாக) செய்து வருகிறது.







### 10. குழந்தைகள் & முதியோர் இல்லங்களுக்கு இனிப்பு, காரவகைகள் மற்றும் பட்டாசு:

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் "மகிழ்வித்து மகிழ்வோம்" என்ற கொள்கையின் அடிப்படையில் ஆதரவற்ற ஏழை குழந்தைகளையும், முதியோர்களையும் மகிழ்விக்கும் நோக்கத்தோடு ஒவ்வொரு ஆண்டும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு, இனிப்பு மற்றும் காரம் வழங்கி மகிழ்விப்பது வழக்கம். குழந்தைகள் காப்பகம், முதியோர் காப்பகங்களுக்கு இனிப்புகள், பட்டாசுகள், உணவு உடை தந்து மகிழ்விக்கப்படுகின்றனர்.




### 11. குளிர் காலங்களில் சாலையோரம் உள்ளவர்களுக்குப் போர்வைகள்:

"மாதங்களில் நான் மார்கழியாக இருக்கின்றேன்"என பகவான் கிருஷ்ணர் சொல்கிறார். மார்கழி மாதம் வந்ததும் விடியற்காலையில் எழுவதும், குளிப்பதும், வாசலில் கோலமிடுவதும், திருப்பாவை, திருவெம்பாவை பாடுவதும், பல கோயில்களில் பக்திப் பாடல்களை ஒலிப்பெருக்கியில் ஒலிக்கச் செய்வதும், சபரி மலைக்குச் செல்லும் பக்தர்களின் சரணகோஷம் விண்ணைப் பிளக்கும் படியும் இருக்கும்! மார்கழி மாதம் விடியலில் எழுவதும் இறைவனைத் தொழுவதும் நன்மை பயக்கும். இதில் சந்தேகம் வேண்டாம். இயேசு நாதர் பிறந்ததும் இந்த மாதத்தில் தான். அவர் வழி நிற்போரும் கிறிஸ்துமஸ் புத்தாண்டு விழா எடுப்பதும் மார்கழி மாதம் தான்!

விடியற்காலை எழுவது இந்த மாதத்தின் சிறப்பு என்றாலும், இந்த மாதம் வந்தால் சிலர் விடியலில் விழித்து எழவேண்டிய அவசியம் இருப்பதில்லை. காரணம் அவர்கள் இரவில் உறங்குவதில்லை. சாலையோரத்திலும், பஸ் நிறுத்தங்களிலும், இரயில் நிறுத்தங்களிலும், சாக்கடை மூடிகள் மீதும், கடை படிகட்டின் மீதும், முழங்காலை தலையில் தொடுமளவு மடக்கி, ஆறடி உயரமுள்ள மனிதன் மூன்றடியாகி நைந்து போன சின்ன ஒரு அழுக்கு துணியால் தேகமெல்லாம் மூடி குளிரில் நடுங்கி சுருண்டு கிடப்பதால் தூக்கம் வருவதில்லை. இவர்களின் மார்கழி மாத விடியல் இப்படித்தான் விதிக்கப்பட்டுள்ளது.

கடையேழு வள்ளல்கள் வாழ்ந்த நமது தமிழ் நாட்டில் பழனியில் "பேகன்" எனும் அரசன், குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த ஒரு மயிலுக்கு தான் போர்த்தியிருந்த விலையுயர்ந்த போர்வையை எடுத்து அதற்குப் போர்த்தி அதன் குளிரைப் போக்கி, அது ஆடதொடங்கியதை கண்டு மகிழ்ந்தான், என்பதை சங்ககாலப் பாடல் கூறுகிறது.





மார்கழி மாத குளிரில் நடுங்கிகொண்டே பாதி உறக்கத்திலிருப்பவர்களைப் பாதி இரவில் எழுப்பி, இதுவரை பல ஆயிரம் போர்வைகளை வழங்கியுள்ளது சென்னை, வேளச்சேரியில் இயங்கும் தீபம் அறக்கட்டளை. ஒரு போர்வை கொடுத்தற்கே அந்தப் "பேகன்" எனும் அரசனை ஓராயிரம் ஆண்டுகளாக பேசி வியக்கும் நாம், இந்த ஆயிரமாயிரம் போர்வையைப் போர்த்திய தீபம் நன்கொடையாளர்களை ஒரு கோடி ஆண்டுகட்குப் போற்றியே பேசி ஆகவேண்டும் அல்லவா? இப்பணி தொடர இந்த மார்கழி மாதம் என்ன செய்ய நினைக்கிறீர்களோ அந்தப் பரோபகாரம் மட்டுமே சன்மார்க்கச் சங்கத்தவர் விழைவு. முற்றிலும் வித்தியாசமான மாற்றத்துடன் சிறக்கட்டும் மார்கழி விடியலின் சிறப்பு!

மார்கழி மாத குளிரில் வாடும் வறியவர்களுக்குப் போர்வை, கம்பளம் தந்து புண்ணிய பலன் விரும்புவோர் தீபம் அறக்கட்டளைக்கு நன்கொடை தந்து உதவலாம்.





**வஸ்திர தானம் ரோக நிவாரணம்!**

## 13.இயற்கை சீற்றங்களில் மக்களுக்கு உதவி:

இயற்கையின் கோரத் தாண்டவம் சில நேரங்களில் இந்த உலகில் வாழும் ஜீவராசிகளை நிலைகுலைய வைத்து விடுகிறது. பூகம்பம், சூறாவளி, சுனாமி, கடுங்குளிர், கடும் வெயில், அடைமழை போன்றவைகளால் பாதிப்புகள் உருவாகின்றன. தானே புயல், சென்னையில் ஏற்பட்ட பெரு மழை வெள்ளம், நீலம் புயல், வர்தா புயல், கஜா புயல் போன்ற பல்வேறு பேரிடர்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, ஆடைகள், மருத்துவம் மற்றும் அந்தச் சூழ்நிலையில் இருந்து அவர்கள் மீளப் பல்வேறு உதவிகளைத் தீபம் அறக்கட்டளை செய்துள்ளது.

### 2012–தானே புயல்:

புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் ஆறு கிராமங்களில் 200 குடும்பங்களுக்கு உதவி:

- ✓ 2000 பேருக்கு அன்னதானம், 6200 கிலோ அரிசி (6.2 டன்)
- ✓ புதிய ஆடைகள், மருத்துவ உதவி மற்றும் பாத்திரங்கள்










## 2015–சென்னை பெரு வெள்ளம்:

தொடர் மழையின் காரணமாக சென்னை முழுவதும் வெள்ளம் சூழ்ந்த நிலையில் , பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேளச்சேரியில் உள்ள நித்ய தருமச்சாலை மூலம் தொடர்ந்து ஒரு மாத காலம் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. வேளச்சேரி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் வாகனம் செல்லமுடியாத அளவு பெருவெள்ளம் சூழ்ந்திருந்த பகுதிகளில் படகு மூலம் சென்று உணவு மற்றும் குழந்தைகளுக்குப் பால் பாக்கெட் வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்ட நிவாரணப் பணியாக அரிசி, ஆடைகள், கேஸ் அடுப்பு போன்ற நிவாரண பொருட்கள் நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.









**2016–வர்தா புயல்:**

சென்னையைத் தாக்கிய சூறாவளிப் புயலால் வீடுகளின் ஓடுகளும், உடைமைகளும் புயல் காற்றினால் சேத மடைந்த பல பகுதி மக்களுக்கு அன்னதானம் மற்றும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.







**2018–கஜா புயல்:**

15.11.2018 அன்று கஜா புயல் டெல்டா மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தையே புரட்டி போட்டது. புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று கட்டங்களாக தீபம் உதவியது.

**20.11.2018** – முதல் கட்ட நிவாரணப் பணியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் பசிப் பிணியைப் போக்க வேளச்சேரியில் இருந்து ஒரு லாரியில் அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள், புத்தாடைகள் உள்ளிட்ட 7 டன் நிவாரணப் பொருட்களுடன் நாகப்பட்டினம் அதன் சுற்று வட்டாரங்களுக்குச் சென்று, நான்கு நாட்களாக கிராமம் கிராமமாக கொட்டும் மழையில் 16 சேவடிகளின் உழைப்பால் சென்று உணவு வழங்கப்பட்டது.

**01.12.2018** – இரண்டாம் கட்ட நிவாரண பணியில் 6 டன் நிவாரண பொருட்களுடன் 3 படகுகள் மூலம் வேதாரணியம் சென்று, 150– க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3000 மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.







**25.12.2018** – மூன்றாம் கட்ட நிவாரணப் பொருட்கள் 3 டன் அரிசி கோடியக்கரைப் பகுதி மக்களுக்கும், வேதாரண்யம் கடற்கரைப் பகுதி குடிசைவாழ் மக்களுக்கும் வழங்கப்பட்டன.

**UNSELFFISHNESS is GOD – Swamy Vivekananda**









தீபம் அறக்கட்டளையின் அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற அன்புடன் அழைக்கிறோம். தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப நன்கொடை தந்து மகிழலாம்!

தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(G) பிரிவின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

**Donate by Cheque / Draft:**

You can also send a Cheque/Demand Drafts in favour of **'DEEPAM TRUST'** with your Name, Contact number, full address with pin code & Email (if available) to the office address mentioned below.

*Deepam Trust,No.30,Throwpathi Amman Kovil Street,Velachery,Chennai – 600 042*

**Donate by Bank Transfer:**

| | | |
|---|---|---|
| **Account Name** | **:** | **Deepam Trust** |
| **Account No** | **:** | **30265475129** |
| **Bank** | **:** | **State Bank of India** |
| **Branch** | **:** | **IIT Madras, Chennai – 600 036** |
| **IFSC Code** | **:** | **SBIN0001055** |

**DONATIONS ARE WELCOME**